13.03.2026
STC.518/2022
PW–1 வைரக்காளை த/பெ.நிறைக்குளம்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

எனக்கு பவர் எழுதிக் கொடுத்த புகார்தாரர் எனது அப்பாவின் அப்பா என்றால் சரிதான். அவர் உயிரோடு தான் இருக்கிறார். பவர் எழுதிக் கொடுத்த பின்பு பவர் எழுதிக் கொடுத்தவர் இறந்துவிட்டால் அந்த பவர் செல்லாத என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். விவசாயம் செய்கிறேன். புகார்தாரரும் நானும் ஒரே ஊரைச் சார்ந்தவர் என்றால் சரிதான். புகார்தாரர் என்ன செய்கிறார் என்றால் விவசாயம் மற்றும் ஆடு வளர்த்து வருகிறார். புகார்தாரர் விவசாயம் செய்து வரும் நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் 57/8 ஆகும். அது மொத்தம் எவ்வளவு விஷ்திரணம் என்றால் 7 –1/2 ஏக்கர் அது 3 ஆக பிரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த 3 ஆக பிரிக்கப்பட்டதில் புகார்தாரருக்கு எவ்வித சொத்தும் கிடையாது என்றால் சரிதான். அதுபோக அவருக்கு வேறு சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்துக்களின் சர்வே எண்கள் என்ன என்றால் 326/1பி ஆகும். அது விஷ்திரணம் தெரியாது. மேற்படி சொத்துக்களில் புகார்தாரர் எவ்வித விவசாயம் செய்யவில்லை. நான் தான் 2 வருடமாக விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாயம் செய்யும் நிலம் 2 –1/2 முதல் 3 ஏக்கர் இருக்கும். புகார்தாரர் கந்தசாமி எனக்கு எழுதிக் கொடுத்த பவர் எனக்கு எப்போது எழுதிக் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. அந்த பவரை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். காசோலை எழுதிக் கொடுத்த தேதியன்றே பவர் எழுதிக் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பணம் கொடுப்பதற்கு முன்பாக எந்த தேதியில் எதிரிகள் பணம் கேட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பணம் கொடுத்தது தான் தெரியும். பணம் எந்த தேதியில் கேட்டார் என்ற விபரம் புகார்தாரருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். எதிரி என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. ஆனால் ஓட்டல் கோவில்பட்டியில் வைத்துள்ளார். புகார்தாரரும் எதிரியும் சேர்ந்து தொழில் செய்து வந்தார்களா என்றால் அவ்வாறு இல்லை.

தான் தாக்கல் செய்துள்ள பவர் பத்திரத்தில் புகார்தாரருக்கு வழக்கில் குறிப்பிடப்பட்ட 5 லட்சமானது எவ்வாறு தனக்கு கிடைக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் ஆடு மாடு வைத்து வியாபாரம் செய்துள்ளார். நான் ஆடு மாடு வைத்து விவாசயம் செய்து வந்தார் என்ற விபரத்தை எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு மாத வருமானம் என்ன என்ற விபரம் எனக்கு தெரியாது. காசோலை எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எதிரியின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. பணம் மற்றும் காசோலை கொடுத்தது எஸ்.பி நத்தத்தில் தான் என்று எனது வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் பணம் கொடுத்தது தான் எஸ்.பி நத்தத்தில் காசோலை கோவில்பட்டியில் வைத்து கொடுக்கபட்டது. வழக்கில் மேற்படி காசோலை கோவில்பட்டியில் வைத்து தான் கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கோவில்பட்டிக்கு எந்த தேதியில் சென்றேன் என்றால் 04.01.2022ம் தேதி சென்றேன். காசோலை கொடுப்பதற்கு முன்பாக எதிரி எஸ்.பி நத்தத்திற்கு எந்த தேதி வந்தார் என்றால் வரவே இல்லை. எதிரியும் புகார்தாரரும் சேர்ந்து தொழில் செய்வதற்காக வழக்கு காசோலையை எதிரி புகார்தாரரிடம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. தொழில் நஷ்டம் ஏற்பட்டதால் இருவரும் பிரிந்துவிட்டார்கள் என்றாலும் பின்பு புகார்தாரர் பாதுகாப்பாக பெற்ற வழக்கு காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

அதனால் தான் பணம் தனக்கு எப்படி கிடைத்தது என்ற விபரத்தையும் எங்கு வைத்து காசோலை கொடுக்கப்பட்டது என்ற விபரத்தையும் வழக்கின் புகாரிலோ எனது விசாரணையிலோ மற்றும் பவர் பத்திரத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் மாத வருமானமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார்தாரருக்கு ஆடு மற்றும் விவாசயத்தின் மூலமும் வரும் வருமானத்தை நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி புகார்தாரரிடம் எவ்வித பணமும் வாங்கவில்லை என்றாலும் தொழில் விஷயமாக செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலையை எதிரிக்கு திருப்பி கொடுக்காமல் அதை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.